பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**23 08 2026** **SUNDAY** **6.30 PM**

## மாநிலச்செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

**1)** கப்பல் கட்டும் முனையமாக உருவெடுக்கும் திறனை இந்தியா கொண்டிருப்பதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

**2)** விளையாட்டுத்துறையின் வளர்ச்சிக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

**3)** சட்டப்பேரவை உறுப்பினர்கள் தொகுதி முழுமைக்கும் சென்று மக்கள் பணியாற்றுவதற்கு ஏதுவாக கார் வழங்கப்படுவதாக மாநில அமைச்சர் திரு நிர்மல்குமார் கூறியுள்ளார்.

**4)** காவிரி டெல்டா மாவட்டங்களில் மழையினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய இழப்பீட்டினை தவெக அரசு வழங்க வேண்டும் என்று அஇஅதிமுக வலியுறுத்தியுள்ளது.

**5)** வியட்நாம் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Dhruv Negi** தங்கப்பதக்கம் வென்றார்.

- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

கப்பல் கட்டும் முனையமாக உருவெடுக்கும் திறனை இந்தியா கொண்டிருப்பதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

இன்று கொல்கத்தாவில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், கப்பல் கட்டும் துறையில் விரைவான வேகத்தில் மாற்றங்கள் நடைபெற்று வருவதாக தெரிவித்தார்.

போர் கப்பல்களை உருவாக்குவதில் சுயசார்பினை எட்ட வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

பாதுகாப்பு தளவாடங்களை உள்நாட்டில் உற்பத்தி செய்ய ஊக்கம் அளிக்கப்பட்டு வருவதாகவும் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

விளையாட்டுத்துறையின் வளர்ச்சிக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

விசாகப்பட்டினத்தில் இன்று நடைபெற்ற பிரிக்ஸ் அமைப்பின் விளையாட்டுத்துறை அமைச்சர்கள் கூட்டத்தில் தொடக்க உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

விளையாட்டு உபகரணங்கள் உற்பத்திக்கும் மத்திய அரசு ஊக்கம் அளித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

உற்பத்திக்கான இந்தியா இயக்கத்தின்கீழ், பிரிக்ஸ் நாடுகள் இந்தியாவில் முதலீடு செய்ய முன்வர வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

பிரிக்ஸ் நாடுகளுக்கு இடையேயான விளையாட்டுத்துறை ஒத்துழைப்பு மேலும் வலுப்படுத்தப்பட வேண்டியது அவசியம் என்றும் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

இன்றைய கூட்டத்திற்கு பின்னர், இதுதொடர்பான கூட்டு பிரகடனமும் வெளியிடப்பட்டது.

<<<<<<>>>>>>

சட்டப்பேரவை உறுப்பினர்கள் தொகுதி முழுமைக்கும் சென்று மக்கள் பணியாற்றுவதற்கு ஏதுவாக கார் வழங்கப்படுவதாக மாநில அமைச்சர் திரு நிர்மல்குமார் கூறியுள்ளார்

இன்று மதுரையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — நிர்மல் குமார் - 42 Sec. )***

<<<<<<>>>>>>

தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை தவெக அரசு நிறைவேற்றவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு உதயநிதி ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று பட்டுக்கோட்டையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு கார் வாங்கித் தருவதாக கூறுவதை திமுக ஏற்கவில்லை என்றார்.

சட்டப்பேரவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுப்பும் கேள்விகளுக்கு முதலமைச்சர் பதிலளிப்பதில்லை என்றும் அவர் குறை கூறினார்.

எதிர்க்கட்சிகள் எழுப்பும் கேள்விகளுக்கு மூன்று அமைச்சர்கள்தான் பதிலளிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கெல்லாம் மக்கள் உரிய பாடம் புகட்டுவார்கள் என்றும் திரு உதயநிதி ஸ்டாலின் கூறினார்.

<<<<<<>>>>>>

காவிரி டெல்டா மாவட்டங்களில் அறுவடைக்கு தயராக இருந்த நெற்பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கியதால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய இழப்பீட்டினை தவெக கூட்டணி அரசு வழங்க வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், திருவாரூர், நாகப்பட்டினம் உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் பெய்த

கனமழை காரணமாக, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 30 ஆயிரம் ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

வருவாய் மற்றும் வேளாண்துறை அதிகாரிகளை உடனடியாக சம்பந்தப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பி பயிர் சேத விவரங்களை முழுமையாக கணக்கெடுக்க வேண்டும் என்றும் திரு எடப்பாடி பழனிசாமி கோரியுள்ளார்.

<<<<<<>>>>>>

காவிரி விவகாரத்தில் தமிழக அரசு மெத்தனம் காட்டக்கூடாது என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

சேலம் மாவட்டம் மகுடங்சாவடியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இப்பிரச்சினையில் உச்சநீதிமன்றத்தை அணுகி நமது உரிமையை மீட்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

காவிரி மற்றும் மேகதாது விவகாரத்தில் தமிழக அரசு வேகமாக செயல்பட வேண்டும் என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>>

கள்ளக்குறிச்சியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகிகள் மீது நடைபெற்ற தாக்குதல் சம்பவத்தில் தொடர்புடையவர்களை காவல்துறையினர் உடனடியாக கைது செய்ய வேண்டும் என்று அக்கட்சியின் மாநிலச் செயலாளர் திரு சண்முகம் வலியுறுத்தியுள்ளார்.

இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இக்கோரிக்கையை விடுத்துள்ள அவர், இதுதொடர்பாக புகார் அளிக்கப்பட்ட பின்னரும் கூட காவல்துறை இதுவரை ஒருவரை மட்டுமே கைது செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதில் தொடர்புடைய அனைத்துக் குற்றவாளிகளையும் காவல்துறையினர் கைது செய்து கடுமையான சட்டப்பிரிவுகளின்கீழ் உரிய தண்டனை பெற்றுத்தர வேண்டும் என்றும் திரு சண்முகம் அந்த அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<>>>>>>

டிஜிட்டல் கைது குறித்து பொதுமக்கள் அச்சம் கொள்ளத்தேவையில்லை என்று திருநெல்வேலி காவல்துறை துணை ஆணையர் திரு சரவணன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள காணொலி பதிவில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

***(Sound Byte — சரவணன் — 45 Sec.)***

<<<<<<>>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — வி ஆர் துரை — 47 Sec. )***

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

போதையில்லா தமிழகம் குறித்த விழிப்புணர்வு மாரத்தானை மாநில அமைச்சர்கள் திரு மதன் ராஜா, திருமதி ஜெகதீஸ்வரி இன்று நெல்லையில் தொடங்கிவைத்தனர்.

-----------------

பெரம்பலூர் மாவட்டம் செட்டிகுளத்தில் உள்ள வெங்காய வணிக வளாகத்தில் அடுத்தமாதம் 3-ஆம் தேதி தொடங்கி வியாழக்கிழமை தோறும் சின்னவெங்காயம் ஏலம் நடைபெறவுள்ளதாக ஆட்சியர் திருமதி சரண்யா அரி அறிவித்துள்ளார்.

------------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணியில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் ஈடுபட்டுள்ளனர்.

------------------

மயிலாடுதுறை மாவட்டத்தில் பெய்த கனமழை காரணமாக அறுவடைக்கு தயராக இருந்த குறுவை நெற்பயிர்கள் சேதமடைந்தன.

-----------------

நாகை மாவட்டம் அகஸ்தியம்பள்ளியில் உள்ள பக்தர்குளம் மாரியம்மன் கோவில் கும்பாபிஷேகம் இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

-------------------

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளதால், தொடர்ந்து எட்டாவது நாளாக பரிசல் இயக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

வியட்நாம் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Dhruv Negi** தங்கப்பதக்கம் வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், **18-21, 21-18, 18-15** என்ற செட் கணக்கில், தென்கொரியாவின் **Lee Yun Gyu**-வை வென்று இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

-------------------

சிங்கப்பூர் சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Tanvi Patri** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

---------------

உலக இளையோர் தற்காப்புக்கலை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் ஜீவநந்தினி சங்கமித்ரன் வெண்கலப்பதக்கம் வென்றார்.

அபுதாபியில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் **52** கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

**<<<<<<END>>>>>>**